


## ஜூன் – 2025 (மடல் - 25) செய்தி – 6

**”என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.”**

***யோவான் (14:26)***

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 21 |
| கோதுமை மணி | 24 |
| துணுக்குகள் | 26 |
| ஆலய பக்கம் | 28 |

**"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." யோவான் [14:26]**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து வழிநடத்திய ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். கடந்த மாதத்தில் நமது AIMS நிகழ்வுகள் மிகச்சிறப்பாக நடைபெற கிருபை செய்த ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். உற்சாகமாகப் பங்குப்பெற்ற உங்கள் யாவருக்கும் நன்றி செலுத்துகிறேன். வருகின்ற நாட்கள் நமக்கு மகிழ்ச்சியான காலமாகக் காணப்பட கர்த்தர் கிருபை செய்வாராக.

பெந்தேகோஸ்தே என்கின்ற கிரேக்க வார்த்தைக்கு, ***50-வது நாள்*** என்று பொருள். அதாவது பஸ்கா பண்டிகைக்குப் பின்பு வருகின்ற 50-வது நாளை பெந்தகோஸ்தே நாள் என்று அழைத்தார்கள். ஆரம்ப காலகட்டத்தில் இந்த பண்டிகை வேளாண்மை விழாவாகவும், அறுவடை விழாவாகவும் கொண்டாடப்பட்டது. ஆண்டவர் தங்களுக்குத் தந்த நல்ல விளைச்சலுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் பண்டிகையாகக் கொண்டாடப்பட்டது. பின்னர் கர்த்தர் இஸ்ரவேல் மக்களோடு உடன்படிக்கை செய்ததை நினைவு கூறும் பண்டிகையாக மாறியது. குறிப்பாக எகிப்திலிருந்து வெளியேறிய ஐம்பதாவது நாள் நியாயப்பிரமாணம் என்கின்ற திருச்சட்டம் பெறப்பட்ட நாளை பெந்தேகோஸ்தே பண்டிகையாகக் கொண்டாடினார்கள். இறுதியாக பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததை நினைவுகூறும், புதிய உடன்படிக்கையின் தொடக்க விழாவாக இந்தப் பண்டிகைக் கொண்டாடப்படுகிறது.

ஒரே கடவுள் பிதாவாகிய கடவுள், குமாரனாகிய கடவுள் பரிசுத்த ஆவியானவராகிய கடவுளாக வெளிப்படுகிறார். ஒரே கடவுள் மூன்று நோக்கத்திற்காகத் தம்மை வெளிப்படுத்துகின்றார். பரிசுத்த ஆவியானவராகிய கடவுளைக்குறித்து நாம் அறிந்து கொள்வோம்.

***1. ஆள்தத்துவமுள்ள பரிசுத்த ஆவியானவர்:***

பரிசுத்த ஆவியானவராகிய கடவுள், ஏதோ ஒரு சக்தி என்று நம்மில் பலர் எண்ணுகின்றோம். ஆனால் பரிசுத்த ஆவியானவராகிய கடவுள் ***ஆள்தத்துவமுள்ள ஆண்டவர்.*** அவருக்கு உணர்ச்சி, அறிவு, சித்தம், விருப்பம் ஆகிய அனைத்து உணர்வுகளும் உண்டு. ஒரு நபருக்கு இருக்கின்ற எல்லாம் உணர்வும் பரிசுத்த ஆவியானவருக்கு உண்டு. அவர் ஜெபிக்கிறார், அவர் கண்டித்து உணர்த்துகின்றார், அவர் சாட்சி கொடுக்கின்றார். எனவே பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ள ஆவியானவர்.

***2. வரவேண்டிய ஆவியானவர் அல்ல, வந்துவிட்ட ஆவியானவர்:***

நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்கின்ற யோவேல் தீர்க்கதரிசியின் வாக்குறுதி நிறைவேறும் வண்ணமாக பெந்தகோஸ்தே நாளிலே

மேல்வீட்டறையில் சீடர்கள் ஒருமனப்பட்டுக் கூடியிருக்கும் பொழுது பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருகின்றார். பரிசுத்த ஆவியினவர் இறங்கி வருவதை மக்கள் பார்க்கும் வண்ணமாக அக்கினிமயமான நாவு ஒவ்வொரு மேலும் வந்து அமர்கிறது. எனவே தூய ஆவியானவர் இனிமேல் இவ்வுலகுக்கு வரவேண்டியவர் அல்லர், அவர் நம்மிடையே வந்துவிட்டார். இனி பரிசுத்த ஆவியினவரே இறங்கும், ஊற்றும், கொட்டும் என்று அழைக்கவேண்டிய அவசியமில்லை. பரிசுத்த ஆவியினாவரே என் உள்ளத்திலே வரவேண்டும் என்றுதான் அழைக்க வேண்டும்.

***3. நிரந்தரமாக தங்கும் பரிசுத்த ஆவியானவர்:***

இயேசு கிறிஸ்து, தூய ஆவியானவரைக் குறித்து சொல்லும்பொழுது யோவான் 14:16ல் நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன் அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருள்வார் என்கிறார். பரிசுத்த ஆவியினவர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் வந்து நம்மை உலுக்கிவிட்டு செல்பவர் அல்லர். அவர் நிரந்தரமாக நம்மோடு தங்குகின்ற ஆண்டவர். நம்மோடு வாசம் பண்ணுதல் என்பதற்கு நம்மோடு கூடாரம் அடித்தார் என்று பொருள்.

பரிசுத்த ஆவியானவர் உணர்ச்சியைத் தூண்டி திடீரென்று வந்து போய்விடுபவர் அல்லர். அவர் நம் உள்ளத்தில் நிரந்தரமாகத் தங்கி இருந்து செயலாற்றுகின்ற ஆண்டவர். எது சரி எது தவறு என்று நமக்குக் கற்றுத் தருகின்றார்.

***4. வரம் அளிக்கின்ற பரிசுத்த ஆவியானவர்:***

பரிசுத்த ஆவியானவர் தமது வரங்களை நமக்கு அளிக்கிறார். தமது விருப்பத்தின்படி ஆண்டவர் வரங்களை நமக்குப் பகிர்ந்து கொடுக்கின்றார். கிறிஸ்தவ வாழ்வுக்கும், ஊழியத்துக்கும் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கின்ற இந்த தனித்திறமை அல்லது தாலந்து மிக மிக அவசியமாக இருக்கிறது. வரங்களை அனைவருக்கும் கொடுக்கிறார், தம்முடைய விருப்பத்தின்படி கொடுக்கிறார். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான வரங்களை பரிசுத்த ஆவியானவர் அளிக்கின்றார்.

பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் வரங்களை திருச்சபையின் பக்தி விருத்திக்காக நாம் பயன்படுத்தவேண்டும். ஆண்டவர் திருநாம மகிமைக்காகவும், அவரின் இறையரசின் விரிவாக்கப் பணிக்காகவும் வரங்களை நாம் பயன்படுத்தும்பொழுது, ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பங்களையும் ஆசீர்வதிக்கிறார். தூயாவினுடைய ஆற்றலை பெற்று நாம் இந்த உலகத்திலே ஆண்டவருக்கு சான்று பகர்வோம்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
**Rev. Dr. A. Samuel**

# ஆயரம்மா மடல்

## "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். அப்போஸ்தலர் 1:8

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாகப் பாதுகாத்து வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

***பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*** அப்போஸ்தலர் 1:8

திரித்துவ தேவனில் பரிசுத்த ஆவியானவரும் ஒருவர். ஒரே தேவன் மூன்று விதங்களில் தம்மை வெயிப்படுத்துகிறார். பரமண்டலங்களில் உள்ள ***பிதா*** பூமியில் மனிதனாக அவதரித்த ***குமாரன்,*** விசுவாசிகளின் உள்ளங்களில் வசிக்கும் ***பரிசுத்த ஆவியானவர்*** என்பதே நமது விசுவாசம். ஒரே கடவுள் மூன்று நோக்கங்களுக்காக தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும் குமாரனோடும் ஒன்றாயிருக்கிறார். (ரோமர் 8:9-10) இங்கு தேவனுடைய ஆவி, பரிசுத்த ஆவி, கிறிஸ்துவின் ஆவி, மற்றும் கிறிஸ்து என்கின்ற பதங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன, ஒரே சிந்தையும், ஒரே சித்தமும், ஒரே நோக்கமும் கொண்டவர்கள், தன்மையிலும் ஒன்றுபட்டவர்கள் என்பதைக்காட்டுகிறது.

திரித்துவ தெய்வத்தை புரிந்து கொள்ள தண்ணீர், பனிக்கட்டி, நீராவி என்ற மூன்று வடிவங்களில் காணப்படும் நீருக்கு ஒப்பிடலாம். இது சற்றுப் பொருத்தமான உவமை, காரணம் மூன்று நிலைகளிலும் காணப்படும் ஒரே பொருள் தண்ணீர். பரிசுத்த ஆவியானவர் நம்மோடு வசிக்கும் கடவுள். இயேசு தாம் உலகை விட்டுச்செல்வதாகவும் (யோவான் 14:2-3), ஆனால் நம்மோடிருக்கும்படியாக பரிசுத்த ஆவியானவரை அனுப்பப்போவதாகவும் வாக்குக் கொடுத்திருக்கிறார். (யோவான் 14:16-20,26)

***பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் செயல்கள்:***

பரிசுத்த ஆவியானவர் உலகத்தின் படைப்பில் பங்கெடுத்துக் கொண்டார் (ஆதியாகமம் 1:1-2). வேதாகமத்தின் நூல்களை எழுதிய ஆசிரியர்கள் துல்லியமாக எழுதும்படி அவர்களை ஏவியெழுப்பி பரிசுத்த ஆவியானவர் எழுதச் செய்கிறார். (அப்போஸ்தலர் 28:25, எபிரெயர் 9:8 10:15, 2பேதுரு 1:21). பரிசுத்த ஆவியானவர் போதிக்கிறார். (நெகேமியா 9:20,30), தேவனுடைய மக்களுக்கு வல்லமையும் வரங்களும் அருளுவதற்காக அவர்கள் மீது வந்திறங்கினார். (எண்ணாகமம் 11:17, 27:18, 1சாமுவேல் 19:20-24, 2இராஜாக்கள் 2:9-14) பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பரிசுத்த ஆவியானவர்

குறிப்பிட்ட வேளைகளில் குறிப்பிட்ட ஊழியங்களை நிறைவேற்றுவதற்காகக் குறிப்பிட்ட நபர்கள் மீது இறங்கி வருகிறார்.

***புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் செயல்கள்:***

இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் படைப்பாற்றலால் பிறக்கிறார். (மத்தேயு 1:20), ஆவியானவரின் வல்லமையால் அபிஷேகம் பணணப்படுகிறார். (மாற்கு 1:10, லூக்கா 4:18, அப்போஸ்தலர் 10:38). நம்மைப் போலவே இயேசுவுக்கும் ஆவியானவரின் ஒத்தாசையும் வல்லமையும் தேவைப்பட்டது, ஏனெனில் அவர் முழுமையான மனிதனாய் இருந்தார். இயேசு இப்பூவுலகில் இருந்தபோது தெய்வீகத் தன்மை பொருந்தியவராகவே இருந்த போதிலும், தமது தெய்வீக வல்லமையையும் மகிமையையும் துறந்தே வாழ்ந்தார். (யோவான் 17:5, பிலிப்பியர் 2:7).

இயேசு கிறிஸ்து, தாமும் பிதாவும் இணைந்து அனுப்பப்போகின்ற பரிசுத்த ஆவியானவரின் யுகம் பற்றிப் பேசுகின்றார். (யோவான் 14:26, 5:26). இவ்வுலகில் கிறிஸ்துவின் சரீரமாம் திருச்சபையை நிலைநாட்டுவதற்காகப் பரிசுத்த ஆவியானவர் சிறப்பான முறையில் செயல்படுகிறார். (எபேசியர் 1:22-23, 5:29-30) நமது ஒருமைப்பாட்டுக்கும் ஐக்கியத்திற்கும் ஆதாரம் பரிசுத்த ஆவியானவரே (அப்போஸ்தலர் 2:17-18), 1கொரிந்தியர் 12:13, எபேசியர் 4:3). பரிசுத்த ஆவியானவர் சிறப்பான வரங்களைத் தந்தருள்கிறார் (ரோமர் 12:6-8, 1கொரிந்தியர் 12:8-10). ஊழியத்திற்கான மக்களைத் தெரிந்தெடுப்பதிலும் திருச்சபையை வழிநடத்துவதிலும் பரிசுத்த ஆவியானவர் சிறப்பாகச் செயல்படுகிறார். (அப்போஸ்தலர் 13:2)

பரிசுத்த ஆவியானவர் நம்மை பரிசுத்தப் படுத்துகிறார். பரிசுத்தமாக்கப்படுதல் என்பதும் நமது இரட்சிப்பில் உள்ளடக்கம் (2தெசலோனிக்கேயர் 2:13). பரிசுத்தமில்லாமல் நாம் தேவனைப் பார்க்க முடியாது. (எபிரெயர் 12:14), நாம் பரிசுத்தமாக வாழ்வதற்குப் பரிசுத்த ஆவியானவரும் நமக்கு உதவுகிறார். பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளத்தில் தங்கியிருந்து செயலாற்ற இடம் கொடுப்போம்

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

**மீட்பரின் பணியில்**

***திருமதி.ஜெபா சாமுவேல்***

# பெண்கள் பகுதி

## பேதுருவின் வாழ்வில் தூய ஆவியானவர்

தன்னையே பலியாகக் கொடுத்த இயேசுவானவர் இந்த உலகத்தை விட்டு பரத்துக்கேறின பின்பு நம்மோடு எப்போதும் இருக்கும்படி அனுப்பிய மிகப்பெரிய இலவச பரிசு, பரிசுத்த ஆவியானவர். குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட அனைவரிடமும் வாசம் பண்ணும்படி அருளப்பட்டவரே பரிசுத்த ஆவியானவர்.

**பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் விடுதலை**




கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு (2கொரி.3:17). நம்முடைய பயம், நம்பிக்கையற்ற சூழ்நிலை, சமாதானக்குறைவு, பாவத்தின் பிடி ஆகிய அனைத்து கட்டுகளிலிருந்தும் நமக்கு விடுதலை அளிப்பவர் நம்மோடு இருக்கும்படி நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியானவரே.

பேதுருவின் வாழ்க்கை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இயேசுவிடம் மிகவும் நெருக்கமாயிருந்த சீஷர்களில் ஒருவரான பேதுரு, இயேசுவானவர் சிலுவையில் அறையப்படுமுன் அவரை மூன்றுமுறை மறுதலித்தார். இயேசுவானவர் உயிர்த்தெழுந்த பின் அவர் தரிசனத்திற்கு முன் மனுஷரை பிடிக்க பெற்ற அழைப்பை மறந்து மீன் பிடிக்கச் சென்றார்.

ஆனால், பெந்தெகோஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவரை பெற்ற பின் இயேசுவைக் குறித்து பிரசங்கித்தார். 3000 பேர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர் (அப்.2:41). தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2தீமோ.1:7) என்ற வசனத்தின் படி, மக்களுக்கு புத்தி புகட்டி அவர்களுக்கு இரட்சிப்பின் வழியைக் காட்டிக் கொடுத்தார்.

- **பயத்திலிருந்து பூரண விடுதலை கொடுப்பவர் பரிசுத்த ஆவியானவர்.**

தேவாலயத்தில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த சப்பாணி, பேதுருவின் மூலம் அற்புத சுகம் பெற்றார் (அப்.3). ரோமர் 15:13-ன் படி, பரிசுத்த ஆவியின் பலத்தினாலே பேதுரு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் கொண்டு இந்த அற்புதத்தை செய்தார். அதைக் கண்டு ஆச்சரியப்பட்ட ஜனங்களிடம் அத்தருணத்தை பயன்படுத்தி நற்செய்தியை அறிவித்தார். 5000 பேர் இயேசுவை விசுவாசித்தார்கள். அதைக் கண்டு சினங்கொண்டு தேவாலயத்துச் சேனைத்தலைவனும் சதுசேயரும் பேதுருவையும், யோவானையும் காவலில் வைத்து, பின் விடுவித்தனர். மறுநாளில், பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும், பிரதான ஆசாரியனுடைய குடும்பத்தார் யாவரும் எருசலேமிலே கூட்டங்கூடி, அவர்களை விசாரித்தபோது,



பேதுரு பரிசுத்தஆவியினாலே நிறைந்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மகிமையைக் கூறி அவராலேயன்றி வேறொருவராலும் ரட்சிப்பு இல்லையென்பதை தைரியமாய் கூறினார். படிப்பறிவில்லாத பேதுருவும் யோவானும் பேசுகிறதைக் கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர்(அப்.4:13).

- **அறியாமையையும், பலவீனத்தையும் அகற்றி, தெளிந்த புத்தியையும், பலத்தையும், வல்லமையையும் தருகிறவர் பரிசுத்த ஆவியானவர்.**



யாக்கோபைக் கொன்ற ஏரோது, பேதுருவையும் சிறைச்சாலையில் அடைத்தான். மக்கள் முன்பு அடுத்த நாள் பேதுருவை நிறுத்த தீர்மானித்திருந்தான். வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக நான்கு வகுப்புகளடங்கிய போர்ச்சேவகர் பேதுருவைக் காவல் காத்துக் கொண்டிருந்தனர். அடுத்த நாள் சிரச்சேதமோ, சித்திரவதையோ நடக்கப்போவது உறுதியாய் இருந்தாலும் பேதுரு நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார்! முற்றிலும் நம்பிக்கையற்ற சூழ்நிலையாய் இருந்த போதிலும் பேதுருவால் சமாதானத்தோடு சேவகர் நடுவே நித்திரை செய்ய முடிந்தது. இதற்கு காரணம் சபையாரின் ஜெபமும், பேதுருவோடு வாசம் பண்ணிய பரிசுத்த ஆவியானவரும் மாத்திரமே. முடிவில் தூதனால் பேதுரு விடுதலையானது நாம் அறிந்ததே.

- **நம்பிக்கையற்ற சூழ்நிலையிலும் நமக்கு விசுவாசம் தந்து நம்மை விடுவிக்கிறவர் நம்மோடிருக்கும் பரிசுத்த ஆவியானவர்.**

உலர்ந்த எலும்புகளுக்கு நரம்புகளையும் மாம்சத்தையும் கொடுத்து, அவைகளுக்கு ஆவியை அனுப்பி, உயிரடைய செய்து, அவைகளை காலூன்றி, மகா பெரிய சேனையாய் நிற்கச் செய்த ஆண்டவர், இன்றைய தினத்திலும் நம் வாழ்வில் அற்புதம் செய்ய வல்லவராய் இருக்கிறார்.

- ஆவியானவரால் எழுதப்பட்ட வேத வசனத்தை நாம் வாசிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் நமக்கு போதித்து, தவறுகளை கண்டித்து உணர்த்தி, நம் வழியை முதலாவது சீர்ப்படுத்துவார்.
- நம்மை இயேசுவின் பிள்ளையாக, நிலையற்ற இவ்வுலகில் திடமாக காலூன்றி நிற்க செய்வார்.
- கிறிஸ்துவின் சேனை வீரராக, கிறிஸ்துவின் ராஜ்யத்தைக் கட்டும் மக்களாக நம்மை மாற்றுவார்!
- பாவத்திலிருந்து விடுதலை கொடுத்து, சமாதானமுள்ள ஒரு ஜெயமுள்ள வாழ்க்கை வாழ உதவி செய்வார்.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### எலிசபெத்து குடும்பம்

புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள முதல் குடும்பம் சகரியா – எலிசபெத்து. அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் [லூக்கா 1:6]. அவர்களுடைய குணங்களைப் பார்ப்போம்.

1. **கர்த்தருடைய சகல கற்பனையின்படியும் நடந்தார்கள்**

ஆவிக்குரிய வாழ்வில் ஒருமனதுடன் இணைந்து, தேவனுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து பரிசுத்தமாய் வாழ்ந்தார்கள்.

**2. எல்லா நியமங்களையும் கைக்கொண்டு வந்தனர்**

நியமங்கள் என்பது ஒழுங்குகள், சட்டதிட்டங்கள். சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து நடந்தனர். சகரியாவும் எலிசபெத்தும் தேவனோடும், மனிதரோடும் நல்ல உறவில் இருந்தனர்.

**3. குற்றமற்றவர்களாய் நடந்தனர்**

தேவனுக்கு விரோதமான பாவம் செய்யவில்லை.

**4. இருவரும் வயது சென்றவர்கள்**

பரிசுத்தமாய் வாழ்ந்த இவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் இல்லாதிருந்தது. இந்த நிலையில் ஆபிரகாமின் வாழ்க்கையை மனதில் கொண்டு எதிர்பார்ப்போடு வாழ்ந்திருக்கலாம். ஆசாரிய வகுப்பைச் சேர்ந்த சகரியா தொடர்ந்து தேவ சந்நிதியில் ஊழியம் செய்து வந்தார். குழந்தைக்காக ஜெபிப்பதை நிறுத்திவிடவும் இல்லை. பதில் கிடைக்கும் வரை ஜெபித்தான். ஆலயத்தில் ஊழியம் செய்து வந்த நேரத்தில் தேவதூதன் தரிசனமாகி உனக்கு ஒரு குழந்தையைக் கர்த்தர் தருவார் என்ற நற்செய்தியை அறிவித்தான். அவனுக்கு என்ன பெயரிட வேண்டும் என்பதையும் அறிவித்தான். பிறக்க போகும் யோவானின் வாழ்க்கை, ஊழியம் எப்படியிருக்கும் என்ற விளக்கமும் வெளிப்படுத்தப்பட்டது.

**சகரியாவின் அவிசுவாசம்**

நானும் என் மனைவியும் வயதானவர்களாக இருக்கின்றோமே. இதை நான் எதினால் அறிவேன் என்று அடையாளம் கேட்டான். ***ஜெபித்தால் போதாது, விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்*** என்பதற்கு சகரியா ஒரு உதாரணம். யோவான் என்ற மகனைப் பெற்றெடுத்தார்கள்.

பிள்ளை பெறும் வரை ஊமையாய் இருந்த சகரியாவின் வாய் திறந்து கர்த்தரைத் துதித்தான்.

**சகரியா – எலிசபெத்து குடும்ப வாழ்விலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

- இருவரும் கர்த்தருக்கு பிரியமான வாழ்வு வாழ்ந்தார்கள்.
- தங்களுக்கு குழந்தை இல்லாத போதிலும் கர்த்தருக்கு தொடர்ந்து ஊழியம் செய்தார்கள்.
- முதிர் வயதான போதிலும் குழந்தை வேண்டும் என்ற விண்ணப்பத்தை தொடர்ந்து ஏறெடுத்து வந்தனர்.
- அவிசுவாசத்தின் தண்டனையாக ஊமையனான்.
- அவன் அவிசுவாசித்த போதிலும் கர்த்தர் வாக்கு பண்ணினதைக் கொடுத்தார்.
- இயேசுவை உலகிற்கு அறிமுகம் செய்து வைக்கும் மகனைப் பெற்றாள் எலிசபெத்து.
- மகன் (யோவான்) எரிந்து பிரகாசிக்கும் விளக்காக விளங்கினான்.

நாமும் தொடர்ந்து ஜெபிப்போம். நன்மையைக் காண்போம்.

**ஷர்மிளா ராஜேஷ்**

# CHILDREN’S CORNER

Dear Children,

The theme this June is “**COME HOLY SPIRIT, SET US FREE**”.



Sometimes we feel scared, sad, or do things we know aren't right. But we’re never alone! The Holy Spirit is God's special helper who comes to be with us.

God doesn't want us to stay in fear or sadness.

When we say, “Come, Holy Spirit, set us free,” we’re asking God to help us with the hardest things in life.

The Holy Spirit makes our hearts light and fills us with peace, just like sunshine after a storm.

## FREE FROM...



- **BAD CHOICES** - He helps us say “no” to doing wrong and “yes” to doing what Jesus wants.
- **SIN** - When we do something wrong, like lying or being mean, it can make our hearts feel heavy. But when we ask the Holy Spirit for help, He shows us the right path and helps us say sorry and seek forgiveness
- **FEAR OF DEATH** - Sometimes we worry about people getting sick or even dying. But Jesus rose again—and the Holy Spirit helps us remember that when we believe in Jesus, we’ll live with Him forever.
- **PAIN AND SADNESS** - When we’re hurt, lonely, or sad, the Holy Spirit comforts. He reminds us that we’re never alone and gives us hope and strength.




## SHORT PRAYER FOR KIDS:

“Come, Holy Spirit, fill my heart.
Help me choose what’s right and good.
Take away my fear and sadness.
Set me free with Your love. Amen.”

## SAYING IT WITH PICTURES…




…but because of his mercy. He saved us through the washing of rebirth and renewal by the Holy Spirit, whom he poured out on us generously through Jesus Christ our Savior, – Titus 3:5–6 NIV



but God has revealed it to us by his Spirit. The Spirit searches all things, even the deep things of God. – 1 Corinthians 2:10 NIV


## NAMES OF GOD #6 JEHOVAH SHAMMAH

Jehovah Shammah – "The Lord is There"




This name appears in Ezekiel 48:35, where God promises that His presence will dwell in the new, restored city of Jerusalem.

Life can sometimes feel uncertain—when we face challenges, fear, or loneliness. But the beautiful truth in God's name Jehovah Shammah reminds us: The Lord is there.




When you feel alone, remember- Jehovah Shammah means God's presence is near. He is your comforter when you're afraid, your guide when you're lost, your strength when you're weak.

**Daily Application** – Take a moment today to invite God's presence into your daily life. Say quietly, "Lord, you are here. I trust You. I am not alone." Feel His peace settle over you, because where the Lord is—there is fullness of joy and freedom from fear.


Jehovah Shammah is a powerful promise: wherever you go, you are never alone.

## TINY TOTS SECTION

### COLOR IN…




Help this child to find his way home.
You, too, need the Holy Spirit to guide you to Jesus and the home in Heaven.




The Holy Spirit will come to help Jesus' followers.

Trace the letters.




Jesus said the Holy Spirit would guide them in Truth.

Follow these letters through the maze.
H o l y S p i r i t




## JESUS' DISCIPLES RECEIVED THE HOLY SPIRIT!!

# Find the Hidden Items

**INSTRUCTIONS:** Use the key to find and circle the hidden items in the picture.



# THE HOLY SPIRIT HELPS US FOLLOW JESUS!!

## SPIRIT SWITCH: Spot 10 Differences



When Jesus was on earth, he spent time with his friends. He told them that after he was gone, God would send the Holy Spirit to be with them.

Jesus said that the Holy Spirit would:

- come after ___ ___ ___ ___ ___ went back to ___ ___ ___ ___ ___ ___
  ↓ ✚ ⇨ ▲ ⇨ / ✾ ✚ ✱ ▼ ✚ →
- give them ___ ___ ___ ___ ___ to ___ ___ ___ ___ ___ ___ ___
  ⇩ ⇧ △ ✚ ⇦ / △ ↑ ● → ✚ ⇨ ⇨
- ___ ___ ___ ___ ___ them everything
  ● ✚ ✱ ★ ✾
- ___ ___ ___ ___ ___ ___ ___ them when they were sad
  ★ ⇧ ← ⭘ ⇧ ⇦ ●

Code:

| ✱ | ★ | ✚ | ⭘ | ✾ | ↑ | ↓ | ← | → | ⇧ | ⇩ | ⇦ | ⇨ | ● | ▲ | ▼ | △ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | C | E | F | H | I | J | M | N | O | P | R | S | T | U | V | W |

# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "COME HOLY SPIRIT; SET US FREE"

1. According to 2 Corinthians 3:17, where the Spirit of the Lord is, there is...

a. Peace | b. Wisdom
c. Freedom | d. Holiness

2. In Acts 1:8, Jesus said the disciples would receive power when...

a. They go to Jerusalem | b. Holy Spirit comes upon them
c. They preach the Gospel | d. They are baptized

3. In Romans 8:2, what has set us free from the law of sin and death?

a. Faith alone | b. The law of Moses
c. The Spirit of life in Christ Jesus | d. The Ten Commandments

4. What did Jesus breathe on the disciples in John 20:22 and say?

a. "Receive the Holy Spirit." | b. "Go and baptize all nations."
c. "Peace be with you." | d. "I am with you always."

5. Which prophet foretold that God would pour out His Spirit on all people? (2:28)

a. Isaiah | b. Ezekiel
c. Joel | d. Jeremiah

6. In Romans 8:15, what spirit have we received?

a. Spirit of slavery. | b. Spirit of fear.
c. Spirit of adoption. | d. Spirit of bondage.

7. What does the Holy Spirit help us do, according to Romans 8:26?

a. Understand the Old Testament. | b. Preach the Gospel boldly.
c. Pray in our weakness. | d. Speak in tongues.

8. What does the Holy Spirit produce in our lives according to Galatians 5?

a. Righteous anger | b. Fruit
c. Persecution | d. Good deeds

9. What is one of the freedoms the Spirit gives us, according to Romans 8:1?

a. Freedom from fasting | b. Freedom from persecution
c. No condemnation for those in Christ | d. Freedom from trials

10. God has sent the Spirit of His Son into our hearts, crying… (Gal. 4:6)

a. "Hallelujah" | b. "Glory to God"
c. "Abba! Father!" | d. "Peace be with us"

11. In John 14:26, what did Jesus say the Holy Spirit would teach?


a. Parables. | b. All things
c. The Ten Commandments. | d. The Psalms

12. According to Ephesians 5:18, what should believers be filled with?

a. Love | b. Hope | c. Peace | d. Holy Spirit

# SET FREE: THE STORY OF JAYDEN

Jayden sat alone at the youth Bible study group. He didn't want to be there. His mom had made him come.




Everything felt heavy lately—school pressure, fake friendships, arguments at home, and a deep sense that he just didn't belong anywhere.


That night, the youth leader spoke about the Holy Spirit. "He's for you. Right now. And where the Spirit of the Lord is—there is freedom."

Freedom? Jayden felt chained—by guilt, anxiety, and loneliness. But then the leader said something that hit him like lightning:

> "The Holy Spirit doesn't wait for you to be perfect. He comes when you ask Him. He sets you free from what you can't carry on your own."

For the first time in weeks, Jayden looked up. That night, during worship, he whispered under his breath, "Come, Holy Spirit… I can't do this alone anymore. Set me free."

He didn't feel fireworks. But something shifted. It felt like someone had unlocked a prison door in his heart. He felt peace, warmth, freedom.




From that day on, things didn't magically become perfect. But Jayden wasn't alone. The Holy Spirit walked with him—giving him courage to face his fears, wisdom to make better choices, and the strength to forgive and start over.

He began to smile for real. Not because everything changed outside—but because he was being changed from the inside.

**APPLICATION**: The Holy Spirit is not distant. He is a helper, a healer, and a liberator. When you invite Him in, He sets you free—from fear, shame, and the lies that say you're not enough.



What else will the Spirit of Truth do?

John 16:12-15

Unscramble the words to read the answer.

He ______ ______ ______ on His ______.
liwl tno paske onw

He ______ speak ______ ______ ______ ______.
illw ylon tahw eH sreha

He will ______ ______ ______ ______ ______ ______ ______.
ltle uoy awth si tye ot meco

He will ______ ______ ______ Me ______ ______ from ______ is ______ and ______ it ______ to ______.
gnibr oyrgl ot yb katgni thaw Mnie kginam wknno oyu

## The Work of the Holy Spirit

On each line, write the letter that is missing from the 2nd word. Then write the letters in the spaces below.



their – tire ___
store – rest ___
flare – fare ___
year – ear ___
stare – tear ___
pear – are ___
pair – rap ___
pear – ape ___
pair – par ___
stare – ears ___

Jesus would not leave the disciples all alone.
Their helper would be the

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _.

Enter your SECRET CODE to unlock games @ games.childrensbulletins.com

SECRET CODE VGR054

## For the Nations

Use the code to discover what happened in Acts 2.

Key: (2,5) = second province, fifth letter (A)




4,7 | 1,5 | 11,1    9,2 | 7,2 | 12,1 | 10,6


8,2 | 6,3 | 2,4 | 14,2 | 15,5 | 14,4    6,1 | 5,5 | 3,4 | 13,4




## Pentecost Pictures

Number the events in the order they happened.

## MISSIONARY STORY - THE PEACE CHILD



Don Richardson was a missionary to the Sawi people of Papua—known for violence and betrayal. When he shared about Jesus, the tribe admired Judas, not Christ, because they valued treachery.

Don cried out in prayer: "Come, Holy Spirit. Help them see Jesus. Set them free."



Soon after, a war broke out between two tribes. To make peace, one tribe gave the other a "peace child"—a baby offered to end the conflict.

In that moment, the Holy Spirit gave Don insight. "God gave us His peace child—Jesus—to make peace with us," – he said. The people finally understood. Hearts softened. Many turned to Jesus. The Spirit had come—and freedom followed.


## MISSIONARY JOURNEY



### APOSTLE # 6 MATTHEW

Matthew, known as Levi, lived and worked in Capernaum. He was a publican and a tax collector, two of the most criticized persons in Jewish society.


When Matthew heard Jesus say, "Follow me," he dropped everything, obeyed, and followed him.




Matthew was the first person to record Jesus Christ's teachings in Hebrew. Early Church tradition holds that the Gospel of Matthew was written by the apostle Matthew. The Holy Spirit is mentioned 12 times in Matthew's gospel.

He preached the gospel to the Jewish community in Judea, before going to other countries including Ethiopia.

It was in Ethiopia that he died a martyr, killed by the king's bodyguard for rebuking the king.




The __________ came to the ________ on the ________________.

> The Bible without the Holy Spirit is a sundial by moonlight.
> Dwight L. Moody

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

1. The theme for the month of June is: ____________________________________.
2. The Holy Spirit sets us free from - ____________; ________________; ___________________; ____________________________.
3. JEHOVAH SHAMMAH means "_____________________________________."
4. **THE STORY OF JAYDEN**
   a. Jayden sat alone at the youth ___________________ group.
   b. That night, the youth leader spoke about the ___________________.
   c. Jayden looked up when the youth leader said – "The Holy Spirit doesn't wait for you to be _________________."
   d. He whispered – "Come __________________; Set me ______________."
5. ____________________was a missionary to the _________________of Papua.
6. God gave us His peace child—_____________—to make peace with us.
7. ___________________, known as Levi, lived and worked in _______________.
8. Matthew was the first person to record Jesus Christ's teachings in ___________.
9. The Holy Spirit is mentioned ___________ times in the book of Matthew.
10. It was in Ethiopia that Matthew died a ___________.

Children let this be our Prayer – Come Holy Spirit; Set us Free. God bless,

Mrs. Briliya Jeyaseelan.

# Answers to May Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – Divine Love

1. c. God is love
2. c. By sending Jesus to die for sinners.
3. c. The Parable of the Prodigal son.
4. d. Agape (Unconditional) Love.
5. b. His love endures forever.
6. a. Width, length, depth... of Christ's love
7. b. Love the Lord... soul and mind
8. c. The Spirit
9. d. Because He first loved us.
10. d. Nothing.
11. c. Laying down one's life for friends.
12. b. 1st John

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

11. The theme for the month of May is: __**Divine Love** _.

12. God's love cannot be measured, God's love is to be **Experienced.**

13. El Shaddai means "**God Almighty**."

14. **Philip**, like Peter and Andrew, was from Bethsaida.

15. John 3:16 says - **For God so loved the world, that He gave His one and only Son that whoever believes in Him shall not perish but have eternal life**

16. **William Carrey** was a missionary who shared God's love in India.

17. Tradition states - Philip went to **Turkey** as a missionary and was martyred.

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

### (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும் என்றது யார்?
2. பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள் - எவர்கள்?
3. பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானாள் - யார்?
4. பரிசுத்த ஆவினால் நிரப்பப்பட்டிருப்பான்- யார்?
5. யார் மேல் பரிசுத்த ஆவி இருந்தார்?
6. விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவன் யார்?
7. தேவன் யாரை பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்?
8. நல்லவனும் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தவன் யார்?
9. பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது - எது?
10. பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் - யார்?
11. பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது எது?
12. பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் யார் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்?
13. பரிசுத்த ஆவியினாலே கிறிஸ்துவை ஆண்டவர் என்று சொன்னது யார்?
14. பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல யார்மேல் இறங்கினார்?
15. பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதான அதிகாரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நினைத்தவன் யார்?

## மே மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி | யோவான் 3:16 |
| 2 | தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பு | யோவான் 15:13 |
| 3 | பரிசுத்த ஆவியினாலே | ரோமர் 5:5 |
| 4 | தேவனில் அன்புகூருகிறவன் | 1 கொரி.8:3 |
| 5 | விசுவாசம், நம்பிக்கை, அன்பு | 1கொரி.13:13 |
| 6 | தேவனுடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் | 1யோவான் 2:5 |
| 7 | நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப் படுவதினாலே | 1யோவான் 3:1 |
| 8 | தேவன் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே | 1யோவான் 3:16 |
| 9 | தேவனால் | 1யோவான் 4:7 |
| 10 | நியாயத்தீர்ப்புநாளிலே | 1யோவான் 4:17 |
| 11 | நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே | 2யோவான் 1:6 |
| 12 | பயத்தைப் புறம்பே தள்ளும். | 1யோவான் 4:18 |
| 13 | தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால். | 1யோவான் 4:9 |
| 14 | நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பது | 1யோவான் 3:11 |
| 15 | நாம் பாவிகளாயிருக்கையிலே கிறிஸ்து நமக்காக மரித்ததினால். | ரோமர் 5:8 |

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும்.*

- வேத வினாக்களின் பதில்களை whatsapp மூலம் அனுப்புவதை தவிர்க்கவும்.

## மே மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs.Desigta Jaison
3. Mr.Emmanuel
4. Mrs.Esther Pauline Rani
5. Mrs.Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Grace shekar
8. Mrs.Helen Sharmila Ray
9. Mrs.Hame RajaGuru
10. Mrs.Jasmin Manuel
11. Mr.Jeba Jino
12. Mrs.Jasmine Sobha
13. Mrs.Jebaseeli Asir
14. Mrs.Jenila Gannraj.L
15. Mrs. Jini Jose
16. Mrs.Kishi Maher
17. Mrs.Manuel Sarah
18. Mrs.Nandhini Rajkumar
19. Mrs.Peppin Jenson
20. Mrs.Persis John
21. Mr.Prawin Durai Sam
22. Mrs.Priya Ranjith Kumar
23. Mrs.Praveena Arun
24. Mrs.Padma Brin
25. Mr.Raja Guru
26. Mr.Salin Robert
27. Mrs.Selvi George
28. Mrs. shobana Milton
29. Mrs.Sheeba Merlin
30. Mrs.Sheeba Herlin
31. Mrs.Sheneegah Stanly
32. Mrs.Sharmila Rajesh
33. Mr.Selva Shaji
34. Mrs. Subija Jino
35. Mrs.Sweetilin Frank
36. Mrs. Vithya Dinesh

## Children who answered May – 2025 Quiz

1. Aadhav Steve Matthew
2. Aaran
3. Adelyn Victoria Jeyaseelan
4. Alston Elvin
5. Brightson Timothy Raj
6. Benson Immanuel Raj
7. Camryn Robert.S
8. Clement Dave
9. Daniel Vanya (RUWAIS)
10. Danion Lemuel
11. Darion Lemuel
12. Diuas Dinesh
13. Defina
14. Evelyn Gracia
15. Evelyn Loria V
16. Evaniya Sherin
17. Evangelia Sharon
18. Efrona
19. Effrin
20. Eion Jayden
21. EricJayden Seniors
22. Gabrilyn Hannah
23. Galvin Robert.S
24. Giana Elin
25. Hadriel Adventier
26. Janey Titus
27. Jarick Aaron
28. Jaslin Shanna
29. Jaylan Paul Jino
30. Joanna Paul Jino
31. Johanan Paul Jino
32. Jerilyn Pushpam Nelson
33. Jevlyn Ana
34. Jeya Jehosheba Maher
35. Jeya Joshua Maher
36. Jim Scott
37. Jen Scudd
38. Jeffrey Samuel
39. Jenessa Johnson
40. Joel Abrakam
41. Joha Anit Manuel
42. Johan Sam Manuel
43. Jessica Eban
44. Jenilin Jose
45. Kavin Immanel
46. Kavi yalini
47. Kathryn Joan
48. Kev Shannen P.S
49. Liana Erin
50. Leona Juliet
51. Leonel I.J. Stalin
52. Linuel I.J. Sherwyn
53. Mishael Wesley
54. Nijolin Jose
55. Rivqah Deby Rajkumar
56. Sam Jesvin Vincent
57. Starlyne Noble
58. Steffi Priscilla .R
59. Sherlyn Sana
60. Selvajesvin (Ruwais)
61. Yedidiah Arun (Ruwais)
62. Yovaan jairus (Ruwais)



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**உயிர் பெற்ற வாலிபன்**

பிசாசின் ஆவி தொடர்ந்து பேசியது. "ஏரோது, காய்பா, யூதாஸ் போன்றவர்களை இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாகத் தூண்டி விட்டதும், பாதாளத்தின் அதிபதியாகிய நான்தான். ஆனால், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னுடைய விருப்பத்திற்கு எதிராக எல்லாவற்றையும் மாற்றி, என் வல்லமைகளை எல்லாம் அழிக்கிறார்" என்று பேசியது.

அதைக் கேட்டுக் கோபமடைந்த தோமா, "இதோ, உன்னுடைய முடிவு மிக சமீபமாய் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால், இவனுக்குள் நீ செலுத்திய எல்லா விஷத்தையும் எடுக்கும்படி, நான் உனக்கு கட்டளை இடுகிறேன்" என்றார்.

உடனே அந்தப் பாம்பு இறந்து போயிருந்த வாலிபனுடைய சரீரத்தில் ஏற்கெனவே கடித்திருந்த இடத்தில் தன் வாயை வைத்து, முழு விஷத்தையும் உறிஞ்சிக் குடித்து, உடல் வெடித்து செத்துப் போனது. உடனே அந்த வாலிபனுடைய சரீரத்தின் நிறம் கொஞ்சம் கொஞ்சமாக இயற்கையான நிலைக்கு மாறத் தொடங்கியது. இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் அந்த வாலிபன் உயிரோடு எழும்பினான்.

உயிர்த்தெழுந்த அந்த வாலிபன் தோமாவைப் பார்த்து, "நான் செய்த பாவத்தின் நிமித்தமாக இருளான வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். எனக்கு மன்னிப்பு கிடைக்குமா?" என்று கேட்டான். தோமா அவனுக்கு கர்த்தர் அருளுகிற மன்னிப்பைப் பற்றியும், அவர் தருகிற நித்திய சந்தோஷத்தைப் பற்றியும் எடுத்து

சொல்லி, பாவமான வாழ்க்கையிலிருந்து இனி மேல் விலகி இருக்கும்படி அவனை எச்சரித்து, சில ஆலோசனைகளையும் கொடுத்து, அவனை இரட்சிப்புக்குள் வழிநடத்தினார்.

மரித்த வாலிபன் உயிர்த்தெழுந்ததையும், தோமா அவனுக்கு கூறிய ஆலோசனையையும் பார்த்துக் கொண்டிருந்த அங்கிருந்த திரள் கூட்ட ஜனங்கள் அனைவரும், “நாங்களும் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும்?” என்று தோமாவிடம் கேட்டனர்.

**தோமாவின் மலைப் பிரசங்கம்!**

இரட்சிப்பின் வழியை அறிவிக்க தோமா, அருகிலிருந்த ஒரு மலைக்கு ஜனங்களை அழைத்துச் சென்றார். அந்த மலையின் மேல் பகுதியில் அவர் நிற்க, ஜனங்கள் அனைவரும் அதற்குக் கீழாக இருந்த சரிவான பகுதியில் அமர்ந்தனர். இயேசுகிறிஸ்து மலையின் மேல் ஏறி நின்று, ஜனங்களுக்கு பிரசங்கித்ததைப் போல, தோமாவும் அங்குத் திரண்டு வந்திருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களை நோக்கி, “இந்த உலகத்திலுள்ள செல்வங்கள் எல்லாம் இங்கேயே அழிந்து போகும்! நான் பிரசங்கிக்கும் இயேசு கிறிஸ்துவின் மீது உங்கள் விசுவாசத்தை வையுங்கள். அவர் உங்கள் வாழ்க்கையில் உங்களோடு கூடப் பயணிக்கிறவராக, பாவ வாழ்க்கையில் இருந்து உங்களைப் பாதுகாத்து, உங்கள் தேவைகளை எல்லாம் சந்தித்து, உங்கள் மனதிற்கு இளைப்பாறுதலைத் தந்து, உங்கள் சரீரத்திற்கு ஆரோக்கியத்தைத் தரும் மருத்துவராகவும் இருப்பார்.....! என்று சொல்லி, இரட்சிக்கப்படுவதற்கான வழியைக் குறித்து அவர்களுக்கு போதித்தார். அதைக் கேட்ட ஜனங்கள் மிகுந்த கண்ணீரோடு தோமாவை நோக்கி, “கடவுளின் மனிதனே, நீர் பிரசங்கிக்கிற கடவுளிடம் நாங்கள் திரும்புவதற்கு, அவர் எங்கள் மேல் இரக்கம் பாராட்டி, எங்களுடைய பழைய பாவ வாழ்க்கையிலிருந்து எங்களை மீட்டு, கடைசி வரைக்கும் அவருடைய வழியில் எங்களை நடத்துவாரா?” எனக் கேட்டனர்.

அதற்கு தோமா, “நீங்கள் உங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து மனம் திரும்பினால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்போதும் உங்களோடு கூட இருந்து உங்களை வழி நடத்துவார்” என்று கூறி அவர்களை இரட்சிப்பின் பாதையில் நடத்தினார்.

**பேசும் குதிரை!**

ஒரு சமயம், தோமா ஜனங்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தார். ஒரு இளம் குதிரை அங்கே வந்தது. தோமா அந்தக் குதிரையைப் பார்த்து, “குதிரையே, இங்கு கூடி வந்திருக்கிற மக்களுக்கு முன்பாக, அவர்கள் கர்த்தரை விசுவாசிக்கத் தக்கதாக, உன் வாய் திறக்கப்பட்டுப் பேசுவாயாக என்று கட்டளையிட்டார்.

உடனே அந்தக் குதிரையின் வாய் கர்த்தருடைய வல்லமையால் திறக்கப்பட்டு, “உன்னதமான கர்த்தருடைய அப்போஸ்தலரும், தேவ குமாரனுடைய ஊழியக்காரனுமாகிய தோமாவே, பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்திய ஜனங்களை கர்த்தருக்கு நேராக நடத்துவதற்காக நீர் இங்கே அனுப்பப் பட்டிருக்கிறீர்! இப்போது என் மீது அமர்ந்து, அருகிலுள்ள பட்டணத்திற்குள் பிரவேசிப்பீராக!” என்று பேசியது.

- தொடரும்

# துணுக்குகள்



## பாடல் பிறந்த கதை

**மா தூய ஆவி! இறங்கும் [பாமாலை 277]**
(*Come Holy Ghost, our souls inspire*)

1. மா தூய ஆவி! இறங்கும்,
விண் தீபம் நெஞ்சில் ஏற்றிடும்;
ஞானாபிஷேக தைலம் நீர்
நல் வரம் ஏழும் ஈகிறீர்.

2. மெய் ஜீவன், ஆறுதல், அன்பும்
அபிஷேகம் தந்திடும்;
ஓயாத ஒளி வீசியே
உள்ளத்தின் மருள் நீக்குமே.

நம் பாமாலைப் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கும் மிகத் தொன்மையான பாடல்களுள் 'மா தூய ஆவி! இறங்கும்' பாடல் சிறப்பான ஒன்றாகும். தற்போது உள்ள வடிவில் கடந்த 350 ஆண்டுகளாக மட்டுமே இப்பாடல் பாடப்பட்டுவந்தாலும் இதன் தோற்றம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகும் என்று பாடல் ஆய்வாளர் Ian Bradley தனது 'Book of Hymns'ல் குறிப்பிடுகிறார்.

இப்பாமாலையின் மூல வடிவம் 9ம் நூற்றாண்டில் பாடப்பட்டுவந்த 'Veni, creator spiritus' என்ற லத்தீன் மொழி பாடலாகும். இப்பாடலை எழுதியவர் யார் என்பது குறித்த தகவல்களை வரலாற்று ஆய்வாளர்கள், Emperor Charles the Fat, Gregory the Great, St Ambrose என்று நிறைய பெயர்களை முன் வைக்கின்ற போதும், Rhabanus Maurus (Archbishop of Mainz in East Francia) என்ற போதகரே இதை எழுதியவர் என்று நிறைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பத்தாம் நூற்றாண்டு முதலே இப்பாடல் பாடப்பட்டு வருவதற்கான ஆதாரங்களை நிறைய ஆய்வர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்துள்ளனர். அந்நாட்களில், ஆலயமணிகள் முழங்க, மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு, தூபவர்க்கத்துடன் பக்தி சிரத்தையோடு ஒரு Ceremonial Hymnஆகப் பாடப்பட்டு வந்துள்ளது இப்பாடல்.

Rabanus கிழக்கு Francia'வில் Archbishop ஆக ஊழியம் செய்து வந்தார். வேத ஆராய்ச்சி மட்டுமல்லாது, கவிதை எழுதுதல், Encyclopaedia உருவாக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளல், கல்வி, இலக்கணம், என்று பன்முகத்திறமை கொண்டவராக அறியப்படுகிறார். அவருடைய சரியான பிறந்த தேதி

தெரியாவிட்டாலும் 801ம் ஆண்டு Benedictine Abbey of Fuldaவில் Deacon ஆக அபிஷேகம் செய்யப் பட்டதற்கான குறிப்புகள் இருக்கின்றன. 803ம் ஆண்டு Abbey பள்ளியின் முதல்வராகப் பொறுப்பேற்ற அவர் அநேக பாடல்கள் எழுதியிருந்தாலும், Veni Creator Spiritus என்ற ராகத்தில் அமையப்பெற்ற இந்தப் பாடலே மிகப்பிரபலமாக விளங்குகிறது


பதினோராம் நூற்றாண்டில் ஆயர்கள் அபிஷேக ஆராதனைகள் (Ordination Services) பேராயர்கள் பிரதிஷ்டை (Consecration of Bishops) ஆகிய ஆராதனைகள்/நிகழ்வுகளில் பாடப்பட்டு வந்த இப்பாடல், இன்றும் உலகமெங்கும் உள்ள அநேக திருச்சபைகளில் இந்த ஆராதனைகளில் பாடப்படுகிறது. “Come Holy Ghost Our souls inspire” எனும் ஆங்கில மொழிபெயர்ப்பை இங்கிலாந்தில் வசித்து வந்த John Cosin (1594-1672) எனும் ஆயர் எழுதினார். 1627ம் ஆண்டு வெளியான ”Collection of Private Devotions in the Practice of the Ancient Church” எனும் புத்தகத்தில் இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு முதன்முதலில் வெளியிடப்பட்டது. Cosin, ஆவியானவர் சபையின் மேல் இறங்கிவருவதைக் குறிக்கும் வண்ணமாக இந்தப் பாடலை தனது திருச்சபையில் காலைதோறும் பாடச்செய்தார். இப்பாடலின் நான்காவது சரணம் பாடப்பட்டபின்னர் Doxology என்றழைக்கப்படும் திரியேகத் துதி பாடப்படுகிறது.

**ஜுலை & ஆகஸ்டு மாத தலைப்பு**

**ஜெபமே ஜெயம்**

***Prayer Brings Victory***

## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – ஜூன் 2025



| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – ஆயர் இல்லம் |
| 3 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 6 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 8 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 10 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 13 | வெள்ளி | 8.00 pm – 11.00 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| | | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| 15 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் – ஆயர் இல்லம் |
| 17 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 20 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| | | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| 24 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 27 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 30 | திங்கள் | 6.30 pm – 8.00 pm | மாத இறுதி ஜெபம் |

# ஆராதனை பாடல்கள் – ஜூன் 2025



| | |
|---|---|
| **06-06-25** | |
| பாமாலை – 128 | சபையாரே கூடிப் பாடி |
| பாமாலை – 274 | ஊதும், தெய்வாயியை |
| கீர்த்தனை – 98 & 242 | ஆவியை மழைபோலே யூற்றும்<br>வாரும் நாம் எல்லாரும் கூடி |
| பாமாலை – 35 | எங்கள் ஊக்க வேண்டல் கேளும் |
| **13-06-25** | |
| பாமாலை – 143 | வானமும் பூமியும் |
| பாமாலை – 184 | ஆ இயேசுவே, உம்மாலே |
| கீர்த்தனை – 64 & 69 | வரவேணும், என தரசே<br>என்ன என் ஆனந்தம் |
| பாமாலை – 265 | நீர் திவ்விய வழி, இயேசுவே |
| **20-06-25** | |
| பாமாலை – 170 | ஆ, சகோதரர் ஒன்றாய் |
| பாமாலை – 311 | சிலுவை சுமந்தோனாக |
| கீர்த்தனை – 70 & 75 | ஆத்துமமே என் முழு உள்ளமே<br>இவரே பெருமான், மற்ற |
| கீர்த்தனை – 8 | தெய்வன்பின் வெள்ளமே |
| **27-06-25** | |
| பாமாலை – 175 | ஆதியில் இருளை |
| பாமாலை – 320 | என் முன்னே மேய்ப்பர் போகிறார் |
| கீர்த்தனை – 74 & 86 | துதி தங்கிய பரமண்டல<br>சுந்தரப் பரம் தேவ மைந்தன் |
| கீர்த்தனை – 248 | வந்து நல்வரம் தந்தனுப்பையா |

## திருமறை பாட ஒழுங்குகள் – ஜூன் 2025

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06-06-25 | பரிசுத்த ஆவியானவர் | ஏசாயா 61:1-11 | அப். 2:1-13 | லூக்கா 4:16-21 | - |
| 13-06-25 | திரித்துவம்: அன்பின் ஐக்கியம் | ஆதி. 18:1-15 | 2கொரி. 13:5-14 | மாற்கு 1:1-11 | 97 |
| 20-06-25 | சீடர்களை உருவாக்குவோம் | 1இராஜா. 19:11-21 | ரோமர் 16:3-16 | லூக்கா 5:1-11 | - |
| 27-06-25 | இயேசுவே உலகின் ஒளி | யாத். 13:11-22 | 1யோவான் 1:1-10 | யோவான் 1:1-14 | 27 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 03-06-25 | நீதிமொழிகள் | 10:1-16 | Tourist Club |
| 10-06-25 | நீதிமொழிகள் | 10:17-32 | Al Wadha |
| 17-06-25 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 24-06-25 | நீதிமொழிகள் | 11:1-16 | Hamdan |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



## BIRTHDAY - June




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Ms. | Evelyn Gracia. R |
| 1 | Mr. | Salin Robert Samuel |
| 2 | Mrs. | Vanitha Mani Inbakumari |
| 3 | Ms | Dafflin D M |
| 4 | Mrs. | Sathya |
| 4 | Mrs. | Bala Nancy P |
| 5 | Mr. | Andrew Jones Arun |
| 5 | Mr. | Johnson Sagayaraj |
| 6 | Mr. | Rajesh T |
| 6 | Mrs. | Sweetlin Selwyn |
| 7 | Mr. | Ashok Raj Kumar |
| 7 | Mr. | Samuel Solomon |
| 8 | Master | Juda |
| 9 | Mrs. | Brini Chandran. S. B |
| 11 | Mr. | Julian John |
| 11 | Mr. | Samuel Prakashraj. R |
| 12 | Mrs. | Pansy Sophia |
| 13 | Mrs. | Shalini |
| 13 | Mr. | Manuel Yesudian |
| 13 | Mr. | Jacob Jerald Ponselvan |
| 13 | Mr. | Jo Ernast D |
| 14 | Ms. | Manuel Yesudial |
| 15 | Mr | Allwin Emmanuel |
| 15 | Mr | Thiyagu Murugaraj |
| 15 | Mr. | Johnson Prabu |




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 16 | Mrs. Dr. | Briliya Rajabel Devadas |
| 16 | Mrs. | Helen Paul |
| 16 | Miss. | Keziah Grace |
| 16 | Mrs. | Jainie Janet Jenitta |
| 18 | Mr. | Abryan Gabriel Jeyaseelan |
| 18 | Mr. | Vasanth Dhanapaul |
| 18 | Master | Nivaan Tarkash Sunil |
| 18 | Master | Abishek Jason J |
| 19 | Mrs. | Savitha |
| 20 | Mrs. | Suganthi Selvin |
| 20 | Master. | Daniel Vanya |
| 20 | Baby | Athira Thiyagu |
| 20 | Mr. | Japa Kumar. C. S |
| 21 | Mr. | Titus Kennerth |
| 23 | Mr. | Vigin Cv |
| 23 | Mrs. | Alice Jennifer |
| 23 | Mr. | Jegan Mahesh |
| 24 | Mr. | Joel Mart |
| 24 | Mr. | Johnson Ramesh Kumar |
| 24 | Mrs. | Christabel Jemila |
| 26 | Ms. | Anoushka |
| 26 | Mr. | Solomon Susinder |
| 26 | Mr. | Godwin Mohan |
| 26 | Ms. | Selvamalar Raviraj |
| 27 | Mrs. | Blessy Kripalani |
| 28 | Mr. | Rejin Raj Manuel. R |
| 28 | Ms. | Jabree Aaron |
| 29 | Ms. | Jerilyn Pushpam |
| 29 | Mr. | Rajkumar |
| 29 | Mr | Jayaraj Robinson |
| 30 | Mr. | Jeyakumar |

## WEDDING ANNIVERSARY - JUNE




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 5 | Mr. | Ruban Ponnuswamy |
| 5 | Mr. | Daniel Jebadurai |
| 6 | Mr. | Sasi Kumar |
| 11 | Mr. | Jeya Mahear |
| 13 | Mr. | Raja Singh |
| 21 | Mr. | Max Jeevin |
| 26 | Mr. | Arul Mozhi Varman |



## Musical Evening



Ruwais VBS – 2025




AIMS - RUWAIS



# AIMS - Madinat Zayed



# AIMS – ABU DHABI





WHERE THE
SPIRIT OF THE LORD IS,
THERE IS
freedom

2 CORINTHIANS 3:17